

விழுப்புரம் சாலையில் தேங்கியுள்ள மழை வெள்ளம்.

## புரட்டிப்போட்ட பெஞ்ஜல் புயல்

# விழுப்புரம் மாவட்டத்தில் 240 கிராமங்கள் துண்டிப்பு

## பொதுமக்கள் மறியல்-2 மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு

விழுப்புரம், டிச.3—

வங்க கடலில் உருவான பெஞ்ஜல் புயல் கடந்த 30—ந் தேதி புதுவை அருகே கரையை கடந்தது.

### 51 செ.மீ. மழை

இந்த புயலால் புதுவை, விழுப்புரம் மாவட்டங்கள் பலத்த பாதிப்புக்குள்ளானது. விழுப்புரம் மாவட்டம் மயிலத்தில் ஒரே நாளில் 51 செ.மீ. மழை கொட்டி தீர்த்தது. இந்த மழை காரணமாக விழுப்புரம் கலெக்டர் அலுவலகம், புதிய பஸ் நிலையம் வெள்ளத்தில் தத்தளித்தது.

மழை சற்று ஓய்ந்திருந்த நிலையில் சாத்தனூர் அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர் தென்பெண்ணை யாற்றில் பெருக்கெடுத்து ஓடியது.

சுமார் 1 லட்சத்து 70 ஆயிரம் கனஅடி தண்ணீர் சாத்தனூர் அணையில் இந்து திறந்து விடப்பட்டது.

இதனால் விழுப்புரம், கடலூர் மாவட்டத்தில் ஆற்றங்கரையோரம் இருந்த கிராமங்கள் பாதிக்கப்பட்டது. அந்த கிராமங்களை மழைநீர் சூழ்ந்தது.

சென்னை— திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் விழுப்புரம் மாவட்டம் அரசூர் கூட்ரோட்டில்தென்பெண்ணையாற்றில் கிளை ஆறான மலட்டாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சாலை துண்டிக்கப்பட்டது.

### போக்குவரத்து துண்டிப்பு

இதேபோன்று கடலூர்— திருவெண்ணைநல்லூர், திருக்கோவிலூர் — திருவெண்ணைநல்லூர் ஆகிய பகுதிகளுக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டது.

மாரங்கியூரில் கோரையாற்று பாலம் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டது. இதனால் அந்த பகுதியில் உள்ள பையூர்மேடு, பைசேத்தூர், பையூர் காலனி, பொங்கராயனூர், பொங் காலனி, மாரங்கியூர், சிறு மதுரை, சந்தைப்பேட்டை உள்பட 15 கிராமங்களை வெள்ள நீர் சூழ்ந்தது.

### தீவானது

மலட்டாறு, கோரையாறு ஆகிய இரு கிளை ஆறுகள் பாயும் பகுதிகளில் மட்டும் சுமார் 115 கிராமங்களில் உள்ள வீடுகள் மற்றும் விளைநிலங்களில் வெள்ள நீர் சூழ்ந்தது. இதனால் அந்த பகுதி தீவுபோல் காட்சி அளிக்கிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் மொத்தம் 240 கிராமங்களை வெள்ளநீர் சூழ்ந்துள்ளது. இதனால் இந்த கிராமங்கள் துண்டிக்கப்பட்டு தீவுப்போல காட்சி அளிக்கிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் மழை வெள்ளத்துக்கு இதுவரை 11 பேர் பலியாகி உள்ளனர். இதில் ஆண்கள் 5 பேர், பெண்கள் 6 பேர் ஆவார்கள். 3 மாடுகளும், 47 ஆடுகளும் உயிரிழந்துள்ளது.

### சாலைமறியல்

அரசூர் கூட்ரோட்டில் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் பாலம் சேதமடைந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பின்னர் அது சரி செய்யப்பட்டு ஒருவழி பாதையில் சரி செய்யப்பட்டது. ஒருவழி பாதையில் வாகனங்கள் திருப்பி விடப்பட்டது.

இந்த நிலையில் இன்று காலை அரசூர் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் அரசூர் கூட்ரோட்டில் திரண்டனர். அவர்கள் சென்னை— திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் மறியலில் ஈடுபட்டனர். பாதிக்கப்பட்ட தங்கள் கிராமங்களை அதிகாரிகள் யாரும் பார்வையிட வரவில்லை. அடிப்படை தேவைகளான உணவு, குடிநீர் கூட செய்துகொடுக்கவில்லை என கூறி அவர்கள் மறியல் செய்தனர்.

### போக்குவரத்து பாதிப்பு

இதனால் வாகனங்கள் 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு அணிவகுத்து நின்றது. மறியலில் ஈடுபட்டவர்களுடன் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். மேலும் வாகனங்களை மாற்று வழியில் திருப்பி விடவும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்த மறியல் போராட்டம் காரணமாக திருச்சி— சென்னை தேசிய நெடுஞ்சாலையில் 2 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் உளுந்தூர்பேட்டை மணிகண்ணன் எம்.எல்.ஏ. பேச்சுவார்த்தை நடத்தினார்.

விழுப்புரம் மாவட்டம் அகரம் சித்தாமூரில் மலட்டாற்றில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக அக்கிராமம் துண்டிக்கப்பட்டு தீவு போல் காட்சி அளிக்கிறது.

கடந்த 4 நாட்களாக மின்சாரம் இல்லாததால் பொதுமக்களின் செல்போன் இயங்கவில்லை. அவர்கள் உறவினர்களை தொடர்பு கொள்ள முடியாமல் அவதியடைந்து வருகின்றனர்.

விழுப்புரம் மாவட்டம் காரப்பட்டு, அலங்குப்பம், திருமுண்டீஸ்வரம், இருவேல்பட்டு உள்ளிட்ட 50—க்கும் மேற்பட்ட கிராமங்களில் தண்ணீர் புகுந்ததால் பொதுமக்கள் உண்ண உணவின்றி தவித்து வருகிறார்கள்.

இந்த பகுதிகளில் 10—க்கும் மேற்பட்ட கார் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் தண்ணீரில் அடித்து செல்லப்பட்டது. மளிகை கடையும் அடித்து செல்லப்பட்டது.

### இயல்பு வாழ்க்கை பாதிப்பு

விழுப்புரம் மாவட்டத்தில் மழை குறைந்தும் தென்பெண்ணையாற்றில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டு தவித்து வருகின்றனர்.

மாலைமலர் தேதி: 3/12/2024